அப்படி எடுக்கின்றவர்களுக்காவது வேலை வாய்ப்பு தேடித் தரும் அலுவலகத்தின் மூலமாகத்தான் எடுக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு இட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்ரெண்டிஸ்ஸாகச் சேரும் தொழிலாளர்களுக்கு அதே தொழிற்சாலையில் வேலை கொடுக்க வேண்டுமென்று அர்த்தம் அல்ல. ஆனால், அப்ரெண்டிஸ்களுக்கென தனி அமைப்பு இருக்கிறது, தனிச் சட்டம் இருக்கிறது. அதன்படி அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளூரிலே படித்த, வேலைக்கு தகுதியாக இருப்பவர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நம்பர் கேட்டால் அனுப்ப மறுக்கிறார்கள். அப்படி உள்ளூரில் படித்து, வேலைக்கு தகுதியாக இருப்பவர்களுக்கு நம்பர்களை அனுப்ப வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ? அப்படி அனுப்பினால் தான், படித்த, தகுதியுள்ள, உள்ளூர்காரர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி அப்படி ஒரு முன்னுரிமை தருகிற வாய்ப்பில்லை.

சென்னை மாநகராட்சியில் பணிகளில் உள்ள வெற்றிடங்கள்

*வினா எண். 30—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிருவாகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பல பதவிகள் காலி ஏற்பட்டும் அவைகள் நிரப்பப்படாமல் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவைகளை நிரப்ப எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) காலியாக உள்ள பதவிகள் தேவை ஏற்படும்போது நிரப்பப்பட்டு வருகின்றன.

1979 அக்டோபர் 29]

திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இப்பொழுது எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன. நான் கேட்ட மூலக் கேள்வி, இரண்டு ஆண்டுகளாக எவ்வளவு பதவிகள் காலியாக இருந்தன, எவ்வளவு பதவிகள் நிரப்பப்பட்டன என்பது. டைரக்ட் ரெக்ரூட்மென்ட் எவ்வளவு, ப்ரமோஷன் எவ்வளவு என்ற விவரத்தை அமைச்சரவர்கள் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாநகராட்சி மன்றத்தின் செயலாளர் பதவி, தனி அதிகாரி செயலாளர் பதவி, ரிப்போர்ட்டர், மொழி பெயர்ப்பாளர், தட்டச்சர் போன்ற பகுதியினர், பொதுப் பிரிவிலே டஃபேதார், குழந்தைப் பராமரிப்புப் பிரிவிலே சில பதவிகள், உதவியாளர், பணித்துறை, நகரமைப்புப் பிரிவு, ஆகியவற்றிலே சில பதவிகள் காலியாக இருக்கின்றன. அவைகளை நிரப்புவதற்கு அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா : என்னுடைய கேள்வி எவ்வளவு பதவிகள் காலியாக இருக்கின்றன என்பது. ஏன் என்றால், பதவிகள் காலியாக இருந்தால், வேலைகள் சரியாக நடைபெறாது. எனவே, எத்தனை பதவிகள் காலியாக இருக்கின்றன என்று சொல்ல முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏறத்தாழ சுமார் 100 பதவிகளுக்கு மேல் காலியாக இருக்கின்றன.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் காலியாக இருக்கின்ற வேலை வாய்ப்புக்களை, வேலை வாய்ப்பு தேடித் தருகின்ற நிலையத்தின் மூலம்தான் நிரப்ப வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது அண்மையில். அந்த உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னாலேயே வேலையில் அமர்த்தப்பட்டு இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றியவர்களை, ஓராண்டாகப் பணியாற்றியவர்களை, இப்பொழுது அண்மையிலே பிறப்பித்திருக்கிற ஜி.ஓ. வைக் காரணம் காட்டி, வேலையிலிருந்து நீக்குகிறார்கள். எனவே, அது ரத்து செய்யப்படுமா ? அப்படி இரண்டு ஆண்டுகள், ஓராண்டு பணியாற்றியவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அவர்கள் மீண்டும் வேலையில் அமர்த்தப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்வி, காலியாக இருக்கிற பதவிகளைப் பற்றியது. ஆனால், உரிய விதிமுறைகள்படித்தான் இப்பொழுது பதவிகள் நிரப்பப்படுகின்றன.

[1979 அக்டோபர் 29

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காலியாக இருக்கிற வேலை வாய்ப்புக் களைப் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். பதவிகள் காலி யாக இருப்பதால்தான் வேலைகள் சரியாக நடக்கவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. ஆனால், பின்னால் வந்த ஜி. ஓ. வைக் காரணம் காட்டி, முன்னாலே வேலைக்கு வந்தவர் களை வேலையிலிருந்து நீக்குகிறார்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கிற கேள்விக் கும், மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. காலியாக இருக்கிற இடம் எத்தனை என்று தான் மூலக் கேள்வியில் கேட்கப்பட்டிருக் கிறது.

[முற்பகல் 9–30]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சுமார் 100 பதவிகள் காலியாக இருப்பதாக இப்பொழுது கூறினார்கள். வேலையில்லாத் திண் டாட்டம் அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்திலே 100 பதவி களை காலியாக வைப்பதற்குக் காரணம் என்ன? அப்பதவி களுக்கு ப்ரமோஷனில் நியமித்தால் கூட, ப்ரமோஷனில் செல்லுகின்றவர் பதவிகளுக்கு புதிய ஆட்களை நியமிக்கலாம்; எனவே, அந்த 100 பதவிகளுக்கும் ஆட்களை நியமிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேலையில்லாத் திண்டாட் டமும் இருக்கிறது, மாநகராட்சியில் நிதியில்லாத் திண்டாட்ட மும் இருக்கிறது. ஆகவே, சூழ்நிலைகளைக் கருதி சில பதவிகளை காலியாக வைக்க வேண்டியிருக்கின்றது. மாநகராட்சி சிக்கனத் தைக் கடைபிடிக்கிற காரணத்தால் சில பதவிகள் காலியாக இருக்கின்றன.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் காலியான பதவிகள் அவ்வப்போது நிரப்பப்படுவதாகத் தெரி வித்தார்கள். பல டாக்டர்கள் புதிதாக அமர்த்தப்பட்டிருக்கி றார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்தவர் சிபாரிசு மூலம் தேர்ந் தெடுத்தாரா அல்லது தகுதி அடிப்படையிலே தேர்ந்தெடுத் தாரா என்பதையும் அதே நேரத்தில், விகிதாச்சார அடிப்படை யிலே அங்கே டாக்டர்கள் அமர்த்தப்பட்டார்களா என்பதையும், அவர்களைத் தேர்ந்தெடுக்க சுகாதார அதிகாரிக்கு உரிமை இருக் கிறதா அல்லது, ஆணையருக்கு உரிமை இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டு, விவரத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 100 இடங்கள் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை ஆண்டு காலமாக காலியாக இருக்கின்றன ? 100 காலி இடங்களுக்கு நிதிநிலைமை சரியாக இல்லையென்று சொன்னார்கள். முன்பு இருக்கின்ற நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் அவை நிரப்பப்பட்டிருந்தன. அந்த 100 இடங்களும் நிரப்பப்படாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? தகுதி உடையவர்கள் இல்லையா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சிக்கனம் கருதியும் தேவை இல்லாமல் இருப்பதாலும், அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. தேவை ஏற்படும்போது நிரப்பப்படுகின்றன.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியிலே உள்ள அந்தப் பதவிகள் அத்தியாவசிய வேலைகள் காரணமாகக் கொடுக்கப்பட்டதா? அல்லது சிலருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கொடுக்கப்பட்ட பதவிகளா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்பொழுது தேவை ஏற்பட்டது. அந்தப் பணிகள் கொடுக்கப்பட்டன. இப்பொழுது தேவையில்லை, ஆகவே, பணி கொடுக்கப்படவில்லை.

செந்தாரப்பட்டி பஞ்சாயத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்.

*வினா எண் 31—திரு. செ. மெ. ராஜு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், செந்தாரப்பட்டி ஊரிலுள்ள பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களை அவ்வூராட்சி மன்றத் தீர்மானம் இல்லாமலேயே அடமானம் செய்து கொடுத்திருப்பதை அரசு அறியுமா—

(ஆ) ஆம் எனில் அப்படி தீர்மானம் இல்லாமல் பட்டா வழங்கப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் எத்தனை ஏக்கர் ?

(இ) தவறுதலாக பட்டா வழங்கப்பட்டிருந்தால் அந்த அதிகாரி மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ?